



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 282 | 05.04.2026 | SUNDAY | PANGUNI: 22 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 282 | 05.04.2026 | ஞாயிற்றுக்கிழமை | பங்குனி : 22 | விலை : ரூ.5/-


## ‘மும்மொழிக் கொள்கையை ஆதரிக்கிறாரா பழனிசாமி?’

# “மத்திய அமைச்சருக்கு முதல்வர் ஸ்டாலின் சவால்!”

சென்னை: ஏப்.5-

‘அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தனது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூற வேண்டும். அவர் பாஜகவால் தீவிரமாக முன்னெடுக்கப்படும் இந்த மும்மொழிக் கொள்கையை ஆதரிக்கிறாரா?’ என தமிழக முதல்வர் ஸ்டாலின் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் கருத்துகள் மிகவும் பொறுப்பற்றவை மற்றும் அசட்டுத்தனமானவை. மேலும், அவை இந்தியாவின் பன்மைத்துவம், கூட்டாட்சி விழுமியங்கள் மற்றும் மாநிலங்களுக்கான மரியாதை ஆகியவற்றின் மீது உங்களுக்குள்ள ஆழமான அலட்சியத்தைப் பிரதிபலிக்கின்றன.

தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை உறுதியாக நிராகரிக்கிறது. இது மொழிகளை எதிர்ப்பது பற்றியது அல்ல, மாறாக திணிப்பை எதிர்ப்பது மற்றும் அரசியலமைப்பு உரிமைகளைப் பாதுகாப்பது பற்றியது. நாடாளுமன்றத்தில் தமிழர்களைப் பற்றி நீங்கள் முன்பு தெரிவித்த இழிவான கருத்துக்களும், அதைத் தொடர்ந்து தாமதமாக நீங்கள் தெரிவித்த மன்னிப்பும், ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நடத்தை முறையை மட்டுமே அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

"இந்தி திணிக்கப்படவில்லை" என்ற உங்களின் கூற்று வெளிப்படையாகவே நேர்மையற்றது. ஒரு கொள்கையானது, தமிழ்நாட்டைப் போன்ற இந்தி பேசாத மாநிலங்களை, உண்மையான தேர்வு ஏதுமின்றி மூன்றாவது மொழியை ஏற்றுக்கொள்ளும்படி கட்டமைப்பு ரீதியாகத் தள்ளும்போது, முக்கியமான கல்வி நிதியுடன் அந்த கொள்கை பிணைக்கப்படும்போது, அது விருப்பத்தின் அடிப்படையிலான விஷயமாக இல்லாமல் போய்விடுகிறது.

இந்தி திணிப்பை ஏற்க மறுத்ததற்காகத் தமிழ்நாட்டைத் தண்டிக்கும் விதமாக, 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின் கீழ் ரூ.2,200 கோடி என்ற மாபெரும் தொகையைச் சட்டவிரோதமாக நிறுத்தி வைப்பது திமிர் பிடித்த செயல் என்பதைத் தவிர வேறில்லை. இவை விருப்ப மானியங்கள் அல்ல; மாறாக, வரிகள் மூலம் வசூலிக்கப்பட்டு, சட்டப்படி தமிழ்நாட்டு மக்களுக்குச் சொந்தமான நிதியாகும். இதை ஒரு வற்புறுத்தல் கருவியாகப் பயன்படுத்த முடியாது.



நான் ஒன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நெகிழ்வுத்தன்மை என்ற போர்வையிலோ, நிதி அழுத்தத்தின் பின்னாலோ அல்லது தேசிய நலன் என்று காட்டப்பட்டோ, எந்தச் சூழ்நிலையிலும் மொழித் திணிப்பைத் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது. இந்தக் கொள்கை மாணவர்கள் மீது தேவையற்ற சுமையைச் சுமத்துகிறது, மாநிலங்களின் உரிமைகளை மீறுகிறது, மேலும் இந்தியாவின் மொழிப் பன்மையை ஒரே வண்ணமுடைய, ஒருபடித்தான "ஒரே இந்தியா" கட்டமைப்பிற்குள் நீர்த்துப்போகச் செய்ய முயற்சிக்கிறது.

இந்த வார்த்தை ஜாலங்களுக்கு மத்தியில், நீங்கள் அடிப்படைக் கேள்விகளைத் தவிர்க்கக் கூடாது. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் குஜராத் முழுவதும் உள்ள பள்ளிகளில் உண்மையில் எந்த மூன்றாவது இந்திய மொழி நடைமுறைப்படுத்தப்படுகிறது?

தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு போன்ற தென்னிந்திய மொழிகளையும், வட இந்தியாவில் பெங்காலி, ஒடியா, மராத்தி போன்ற மொழிகளையும் எத்தனை பிஎம் ஸ்ரீ பள்ளிகள் உண்மையாகவே வழங்குகின்றன?

கேந்திரிய வித்யாலய 'சங்கதன்' கீழ் உள்ள எத்தனை பள்ளிகள் உண்மையில் தமிழ் கற்பிக்கின்றன? கடந்த 10 ஆண்டுகளில் எத்தனை தமிழ் மற்றும் பிற தென்னிந்திய மொழி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்?

மேலும், சமஸ்கிருதத்துடன் ஒப்பிடுகையில், தமிழ், கன்னடம், மலையாளம், ஒடியா போன்ற செம்மொழிகளை மேம்படுத்துவதற்காக என்டிஏ அரசு எவ்வளவு செலவு செய்துள்ளது என்பதைப் பதிவு செய்து காட்டுமாறு நான் உங்களுக்குச் சவால் விடுகிறேன்.

தமிழ்நாட்டில் பள்ளி உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்ற உங்கள் கருத்தும் அதே அளவு ஆதாரமற்றது. பல பத்தாண்டுகால தொடர்ச்சியான முதலீடு, அதிக மாணவர் சேர்க்கை, வலுவான கற்றல் விளைவுகள் மற்றும் முன்னோடியான நலத்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் மிக வலிமையான பொதுக் கல்வி முறைகளில் ஒன்றை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

இந்தி திணிப்புக்கு எதிரான எங்கள் எதிர்ப்பு அச்சத்தின் காரணமாகப் பிறந்ததல்ல. நமது தாய்நாடான தமிழ் ஒருபோதும் பலவீனமடையாது. தமிழும் தமிழர்களும் ஒவ்வொரு விதமான திணிப்பு அல்லது கலாச்சார ஊடுருவலையும் தாங்கி நின்றிருக்கிறார்கள், தொடர்ந்து எதிர்த்து நிற்பார்கள். இது கொள்கை, கண்ணியம் மற்றும் இந்தியாவின் உண்மையான பன்முகத்தன்மையைப் பாதுகாப்பது தொடர்பான ஒரு விஷயமாகும்.

சமூக ஒருமித்த கருத்து மற்றும் வலுவான கல்வி விளைவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, நிரூபிக்கப்பட்ட தனது இருமொழிக் கொள்கையை, பன்முகத்தன்மையைக் குறைத்து, மாணவர்களுக்குச் சுமையை ஏற்படுத்தி, இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பை பலவீனப்படுத்தும் ஒரு மையப்படுத்தப்பட்ட கட்டமைப்புக்காக தமிழ்நாடு கைவிடாது.

தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை உலக அரங்கில் ஒரு வெற்றிக் கதையாகத் திகழ்கிறது; அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், மருத்துவம், விண்வெளி ஆராய்ச்சி ஆகியவற்றில் தமிழர்கள் தங்கள் முத்திரையைப் பதித்துள்ளனர்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியும், அனைவரையும் உள்ளடக்கும் தன்மையும் இந்த மாதிரியில் ஆழமாக வேரூன்றியுள்ளன. எங்களின் அனைத்துக் கூற்றுகளையும் அனுபவப்பூர்வமான தரவுகளின் மூலம் எங்களால் நிரூபிக்க முடியும், மேலும் உங்கள் வாதங்கள் முற்றிலும் சொல்லாட்சிக் கலையாகவும், கல்வித் துறையில் எந்தவொரு உண்மையான தரவுகளும் அற்றவையாகவும் உள்ளன.

நவீனக் கல்வியில் தமிழ்நாட்டின் பள்ளிகள் பின்தங்கியுள்ளன என்று கூறுவது தவறானது மற்றும் அலட்சியமானது. மாணவர் சேர்க்கை, கற்றல் விளைவுகள் மற்றும் புதுமைகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாடு அரசு உள்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன், 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடையும் இலவச காலை உணவுத் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

2026 திமுக தேர்தல் அறிக்கையில் காலை உணவுத் திட்டத்தை எட்டாம் வகுப்பு வரை நீட்டித்து, கூடுதலாக 15 லட்சம் மாணவர்கள் பயனடைவதாக உறுதியளிக்கிறது. பொதுக் கல்வி என்பது எங்களின் முதன்மையான முன்னுரிமையாகும்; அது ஒரு செலவினமாகக் கருதப்படாமல், நீண்டகால சமூகப் பலன்களை உருவாக்கும் ஒரு சமூக முதலீடாகக் கருதப்படுகிறது.

தமிழ்நாட்டு மக்களின் வாக்குகளைக் கோரும் அதே வேளையில், ஒவ்வொரு இந்தியக் குழந்தையும் தமிழ்நாட்டின் மண்ணில் மூன்று மொழிகளைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்ற இந்தப் பிரகடனத்தை வெளியிடுமாறு நான் உங்களுக்குச் சவால் விடுகிறேன்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மற்றும் அவரது தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூற வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். பாஜகவால் தீவிரமாக முன்னெடுக்கப்படும் இந்த மும்மொழிக் கொள்கையை அவர்கள் ஆதரிக்கிறார்களா?

பழனிசாமி, தாம் தமிழக மக்களின் பக்கம் நிற்கிறாரா அல்லது கொள்கை என்ற போர்வையில் இந்தியைத் திணிக்க முயலும் தனது டெல்லி மேலதிகாரிகளின் பக்கம் நிற்கிறாரா என்பதை சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவுபடுத்த வேண்டிய தருணம் இது’ எனத் தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரியில் மதுபான விற்பனைக்கு ரசீது கட்டாயம்; மொத்த விற்பனைக்கு தடை

புதுச்சேரி: ஏப்.5-

புதுச்சேரியில் மதுபானம் விற்பனைக்கு ரசீது கட்டாயம் தரவேண்டும். மொத்த விற்பனைக்கு தடை விதித்து கலால் துறை உத்தரவிட்டுள்ளது. மேலும், விதி மீறினால் உரிமம் சஸ்பெண்ட் அல்லது ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கலால் துறை துணை ஆணையல் மாத்யூ பிரான்சிஸ் வெளியிட்ட உத்தரவு: புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள பல மதுபானக் கடைகள் மற்றும் மதுபான விடுதிகள் விற்பனையின் போது முறையான ரசீதுகளை வழங்குவதில்லை என புகார்கள் வந்துள்ளன.

மதுபானம் வழங்கும் உரிமம் பெற்ற அனைத்து மதுபானக் கடைகள் / ஓட்டல்கள் / உணவகங்களின் அனைத்து உரிமதாரர்களுக்கும், வாங்கப்பட்ட அளவைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு விற்பனைக்கும் முறையான ரசீதை தரவேண்டும். அதேபோல் மதுபானம் மொத்தமாக விற்பனை செய்யப்படுவதாகவும் புகார்கள் வந்துள்ளன.

ஒவ்வொரு கொள்முதலுக்கும் ரசீது வழங்காதது, மொத்த விற்பனையை மறைப்பதைக் காட்டுவதோடு, அனுமதிக்கப்பட்ட அளவைத் தாண்டி மதுபானம் விற்பனை செய்வதற்கு உரிமதாரர் சாக்குப்போக்கு சொல்லவும் வழிவகுக்கிறது.

மேலும், ரசீதுகள் இல்லாமல் விற்கப்படும் எந்தவொரு மதுபான விற்பனையும் (அளவைப் பொருட்படுத்தாமல்), புதுச்சேரி சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026ல் ஈடுபட்டுள்ள நபர்கள், வாக்காளர்களைத் தூண்டுவதற்காக மதுபானத்தைக் குவித்து வைக்க உரிமதாரருக்கு மறைமுகமாக வழிவகுக்கும் என்று இப்போது கருதப்படுகிறது.

அதன்படி, செல்லுபடியாகும் ரசீதுகள் இல்லாத அனைத்து விற்பனைகளும் மொத்த விற்பனையாகக் கருதப்படும்.எனவே, புதுச்சேரி மண்டலத்தின் அனைத்து மதுபான உரிமதாரர்கள் / குத்தகைதாரர்களும், முறையான ரசீதுகளுடன் மற்றும் அனுமதிக்கப்பட்ட விற்பனை அளவிற்குள் மதுபானங்களை விற்குமாறு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பரிந்துரைக்கப்பட்ட வரம்பிற்கு மேல் மதுபானம் விற்பனை செய்வது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. கண்டிப்பாக விதிகள் பின்பற்றப்பட வேண்டும். இதில் ஏற்படும் எந்தவொரு தவறும் மிகவும் கடுமையாகக் கருதப்பட்டு, புதுச்சேரி கலால் சட்டம் 1970 இன் பிரிவு 28(1)(e)இன் கீழ் உரிமங்கள் இடைநீக்கமோ ரத்தோ செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

## “பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை” திருமாவளவன் திடீர் அறிவிப்பு

சென்னை: ஏப்.5-

“எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை” என விசிக தலைவர் திருமாவளவன் அறிவித்துள்ளார். மேலும், “நான் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்ட காட்டுமன்னார்கோவில் தொகுதியில் விசிக வேட்பாளராக மறைந்த தலைவர் இளையபெருமாளின் மகன் ஜோதிமணி போட்டியிடுவார்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

வரும் 23ம் தேதி தமிழகத்தின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளது. இதில் திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள விசிக 8 தொகுதிகளில் போட்டியிடுவதாக உடன்பாடு எட்டப்பட்டது.

தேர்தலில் விசிக போட்டியிடும் தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்தார். அதில் கட்டுமன்னாகோவில் தொகுதியில் தானே போட்டியிடுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில், செய்தியாளர்களிடம் கூறிய: “சட்டமன்றத்துக்குள் பேசலாம் என நான் ஆசைப்பட்டேன். 2026 தேர்தல் முடிவுகளுக்கு பிறகு தமிழ்நாட்டின் அரசியல் சூழல் மாறும் என நான் கருதுவதாக எங்கள் கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்தேன். அப்போது நான் சட்டமன்றத்தில் இருந்தால் நல்லது என்று நான் நினைத்தேன். இதன் பின்னணியில் வேறு எதுவும் இல்லை.



பாஜகவும் அதிமுகவும் இங்குள்ள சமூக நீதி அரசியலை சீர்குலைக்க பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட சூழலில் சட்டமன்றத்திலும் இருக்க விரும்பினேன். என்னை யாரும் ‘இதை செய், அதை செய்’ என பணிக்க முடியாது. அது எந்த காலத்திலும் நடக்காது. நான் போட்டியிட விரும்பினேன். அவ்வளவுதான்.

கடந்த சில நாட்களாக ஏதோ ஒரு நோக்கத்துடன் சட்டமன்றத்துக்குள் திருமாவளவன் செல்ல பார்க்கிறார் என விவரணை செய்யப்பட்டது. நான் துணை முதல்வராக விரும்புகிறேன் என சொல்லப்பட்டது. இதெல்லாம் எங்கள் கூட்டணியின் நலனை பாதிக்க செய்யும் வகையில் கருத்து பரப்பப்பட்டது.

யுத்த காலத்தில் முன்னே செல்வதும், பின் வாங்குவதும் ஒரு யுக்தி. எனக்கு பதவி ஆசை கிடையாது. கூட்டணி ஆட்சியை நான் கோரமாட்டேன் என ஏற்கெனவே சொல்லிவிட்டேன். எனது நோக்கத்தை கொச்சைப்படுத்தும் விதமாக சிலர் கருத்து பரப்பினர்.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி 200 இடங்களில் வெல்லும். இதை நான் உறுதியாக சொல்கிறேன். தொங்கு சட்டசபை வரும் என்ற கணக்கில் நான் போட்டியிடுவதாக சொல்லப்பட்டது. அந்த கருத்து தவறானது. அதனால் நான் முன்வைத்த காலை பின்வைக்கவில்லை. இதை ஒரு யுக்தியாக பார்க்கிறேன். அதை மாற்றி வைக்கிறேன். என் நிலைப்பாட்டை தள்ளிவைக்கிறேன்.

நான் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்ட காட்டுமன்னார்கோவில் தொகுதியில் விசிக வேட்பாளராக மறைந்த தலைவர் இளையபெருமாளின் மகன் ஜோதிமணி போட்டியிடுவார்” என்றார்.

## “கருணாநிதி குறித்து பழனிசாமி பேசியது தேர்தல் ஜனநாயகத்துக்கு இழுக்கு” : பெ.சண்முகம்

சென்னை: ஏப்.5-

‘முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்த எடப்பாடி பழனிசாமியின் தேர்தல் பரப்புரை பொருத்தமற்ற வகையிலும், கண்ணியக்குறைவாகவும் உள்ளது தேர்தல் ஜனநாயகத்துக்கு இழுக்கு ஏற்படுத்துகிறது’ என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘பொதுவாகவே தேர்தல் களத்தில் விமர்சனங்களை முன்வைக்கும்போது அரசியல் நாகரீகத்தோடும், முதிர்ச்சியோடும் அவை அமைய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி, அண்மையில் தனது தேர்தல் பிரச்சார உரையில், தமிழகத்தின் மிக மூத்த அரசியல் தலைவரும், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவருமான கருணாநிதி உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் மற்றவர்களால் வீட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தார், அவர் தலைவராக இருந்தபோதே மு.க. ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கட்சியைக் கைப்பற்றிவிட்டார்கள் என்று அவதூறு செய்திருக்கிறார்.

கருத்துகளும், கொள்கைகளும் மோத வேண்டிய களத்தில், தமிழக முதல்வர் குறித்து உண்மைக்குப் புறம்பாக அவதூறு செய்யும் நிலைக்கு அதிமுக பொதுச் செயலாளர் வந்தது ஏன்?

தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களையும், இந்திய மக்களையும் வஞ்சிக்கும் கூட்டணி கட்சியான பாஜகவைப் புகழ்ந்து பேச எதுவும் இல்லை. அதிமுகவின் பத்தாண்டு கால ஆட்சி குறித்து சொல்வதற்கும் எதுவும் இல்லை. எனவே தான் தரம் தாழ்ந்து அவதூறு பிரச்சாரத்தில் இறங்கி இருக்கிறார். கட்சி அடையாளங்கள், கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றையெல்லாம் கடந்து அரசியலில் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடுகளின் எல்லை தாண்டப்பட்டதாகவே இந்த உரையைக் கருத வேண்டி உள்ளது.

எடப்பாடி பழனிசாமியின் தேர்தல் பரப்புரை பொருத்தமற்ற வகையிலும், கண்ணியக்குறைவாகவும் தொடர்ச்சியாக அமைந்து வருவது தேர்தல் ஜனநாயகத்திற்கு இழுக்கு ஏற்படுத்துகிறது என்ற முறையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இதற்குக் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது’ எனத் தெரிவித்தார்.

# “வைகையில் இறங்குகிறார் கள்ளழகர்!” சிகர நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தத் தயாராகும் மதுரை மாவட்டம்

மதுரை அழகர் கோவில் ஏப்.5-

மதுரையின் அடையாளமான சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வாக, கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவம் வருகிற மே 1ம் தேதி நடைபெற உள்ளது. இதனையொட்டி, திருவிழா முன்னேற்பாடுகள் குறித்த சிறப்பு ஆலோசனைக் கூட்டம் அழகர் கோவில் அலுவலகத்தில் நடைபெற்றது.



இந்து சமய அறநிலையத்துறை கள்ளழகர் கோவில் இணை ஆணையர் ஹரிஹரன் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்டக் காவல்துறை அதிகாரிகள், மருத்துவத் துறை, தீயணைப்புத் துறை மற்றும் பொதுப்பணித் துறையினர் உள்ளிட்ட அனைத்துத் துறை அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

*ஆலோசனைகள்:*

பக்தர்களுக்குத் தேவையான தடையற்ற குடிநீர் வசதி மற்றும் பொதுச் சுகாதாரம். கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தப் பலத்த காவல்துறை பாதுகாப்பு. தடையற்ற போக்குவரத்து சீரமைப்பு மற்றும் இதர அவசர கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

*விழா ஏற்பாடு:*

கோவில் நிர்வாகத்தின் அனைத்துப் பிரிவு அலுவலர்களும் ஒருங்கிணைந்து விழாவிற்கான பணிகளை முடுக்கிவிட்டுள்ளனர். மதுரையின் பாரம்பரியம் மாறாமல் திருவிழாவைச் சிறப்பாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

# வானிலை முன்னறிவிப்பு: கோவை, நீலகிரி, ஈரோடு, தேனியில் கனமழை வாய்ப்பு

சென்னை, ஏப்.5-

தமிழகத்தில் கோவை, நீலகிரி, ஈரோடு, தேனி ஆகிய 4 மாவட்டங்களில் நாளை (ஏப்.5) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.



இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மரத்வாடா முதல் தென்தமிழகம் வரை உள் கர்நாடகா வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஏப்.5) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 6ம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 7ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்காலிலும், 8 முதல் 10ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை (ஏப்.5) கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு மற்றும் தேனி மாவட்டங்களிலும், நாளை மறுநாள் விருதுநகர், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

வட தமிழகத்தில் நாளை முதல் 7ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகரிக்கக்கூடும். தென்தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐஎன்எஸ் தாராகிரி போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு

விசாகப்பட்டினம், ஏப்.5-

ஐஎன்எஸ் தாராகிரி போர்க்கப்பல் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் நேற்று நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கப்பட்டது.



இந்தியக் கடற்படையின் வலிமையை மேலும் அதிகரிக்கும் விதமாக, நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஎன்எஸ் தாராகிரி உருவாக்கப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தில் இந்தப் போர்க்கப்பலை கடற்படையில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று இணைத்து வைத்தார்.

இந்த விழாவில் கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி, பாதுகாப்புப் படை தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மும்பையிலுள்ள மசகான் கப்பல் கட்டும் தளத்தில் கட்டமைக்கப்பட்ட தாராகிரி, ‘மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் உருவான 6,670 டன் எடையுள்ள வலிமைமிக்க போர்க்கப்பலாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள 75 சதவீதத்திற்கும் அதிகமான பாகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை. இந்தத் திட்டத்தின் மூலம் 200க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தாராகிரி உருவாக்கத்துக்கு பங்களிப்பு செய்துள்ளன.

முந்தைய வடிவமைப்புகளைக் காட்டிலும் முன்னேறிய தொழில்நுட்பத்தைக் கொண்ட இக்கப்பல், ரேடார்களின் பார்வையில் படாமல் தப்பிக்கும் வசதியைக் கொண்டது. எதிரி நாடுகளின் ரேடார்களுக்குத் தெரியாமல் கடல் பரப்பில் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் திறன் இந்த கப்பலுக்கு உண்டு.

இக்கப்பல் அதிவேகமாகவும், நீண்ட தூரம் பயணிக்கும் திறனுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒலியை விட வேகமான சூப்பர்சோனிக் ஏவுகணைகள், நடுத்தர தூர வான் பாதுகாப்பு ஏவுகணைகள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிந்து அழிக்கும் கருவிகள் இதில் உள்ளன.

போர்க்களத்தில் நொடிப் பொழுதில் முடிவெடுக்க உதவும் நவீன ‘காம்பாட் மேனேஜ்மென்ட் சிஸ்டம்' மூலம் ஆயுதங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்தோபசிபிக் பிராந்தியத்தில் மாறிவரும் பாதுகாப்புச் சூழல் மற்றும் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தாராகிரி போர்க்கப்பலின் வருகை மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளதாக ராஜ் நாத் சிங் தெரிவித்து உள்ளார்.

# சின்னம்மாவிடம் வெற்றிக்கனியைச் சமர்ப்பிப்பேன் : டாக்டர் பாலமுருகன் உறுதி

மதுரை ஏப். 5-

மதுரை மாவட்டம் சோழவந்தான் தனி சட்டமன்றத் தொகுதியில், அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் டாக்டர் பாலமுருகன், மஞ்சமலை அய்யனார் கோவிலில் சிறப்புப் பூஜை செய்து தனது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார்.



அலங்காநல்லூர் கேட்டுக்கடையிலிருந்து நூற்றுக்கணக்கான வாகனங்கள் சூழ, ஆதரவாளர்களின் உற்சாக வரவேற்புடன் வலையப்பட்டி மஞ்சமலை அய்யனார் கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார்.

தேர்தல் வாக்குறுதிகள்: வெற்றி பெற்றவுடன் சோழவந்தான் தொகுதியில் அரசு கலைக்கல்லூரி அமைத்தல், முடங்கிக் கிடக்கும் சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குதல் மற்றும் சோழவந்தான் பேருந்து நிலையத்தைச் சீரமைத்தல் ஆகிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என டாக்டர் பாலமுருகன் தெரிவித்தார். மக்களின் நன்மதிப்பைப் பெற்று 'தென்னந்தோப்பு' சின்னத்தில் மாபெரும் வெற்றி பெறுவேன் எனச் செய்தியாளர்களிடம் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நிர்வாகிகள் பண்ணைகுடி மைனர் ராமச்சந்திரன், சமயநல்லூர் சேர்வை செல்லப்பாண்டி, வழக்கறிஞர் முருகன், தவம், ராஜவர்மன், குமரேசன், முன்னாள் கவுன்சிலர் ராஜேந்திரன், தென்கரை திரவியம், பேட்டை விஜயன், அதிமுக உரிமை மீட்பு குழு முருகன், பேட்டை சசி, அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகிகள் சந்திரசேகர் கார்த்திகேயன், ராமபிரசாத், நாகசேது ,சாய்குமார், சரவணன், அசோக், செல்லப்பாண்டி, பாட்டாளி மக்கள் கட்சி ராமதாஸ் அணி சமயநல்லூர் கிட்டு, எர்ரம்பட்டி அழகுராஜா, முடுவார்பட்டி பிரபு, மெய்ப்பன்பட்டி முருகன், பாலா, பாஸ்கரன், சரோஜினி, மற்றும் இந்து முன்னணி ரமேஷ், உள்ளிட்ட நிர்வாகிகள் அலங்காநல்லூர் பாலமேடு வாடிப்பட்டி சோழவந்தான் சமயநல்லூர் பகுதிகளை சேர்ந்த கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# சுதந்திரப் போராட்டத்தில் குஜராத்திகளின் பங்களிப்பை கேள்வி கேட்ட மஹுவா மொய்த்ரா

புதுடெல்லி, ஏப்.5-

மேற்கு வங்கத்தின் கிருஷ்ணா நகர் தொகுதி எம்.பி.யாக இருப்பவர் மஹுவா மொய்த்ரா. மாநிலத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் துடிப்பான எம்.பி.யாக இருக்கிறார். இவரது பேச்சுகள் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் சர்ச்சைகளை ஏற்படுத்தியதுண்டு.சமீபத்தில் மஹுவா மொய்த்ரா செய்தியாளர்களிடம் பேசும் போது, ‘‘சுதந்திரப் போராட்டத்தில் வங்காள மக்களின் பங்களிப்போடு ஒப்பிடுகையில், குஜராத் மக்களின் பங்களிப்பு எத்தகையது? ‘காலாபானி' (அந்தமான் சிறை) தண்டனை பெற்றவர்களில் எத்தனை பேர் குஜராத்திகள் ?’’ என்று கேள்வி எழுப்பினார். இதனால் முதல்வர் மம்தாவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.



மேற்கு வங்க தேர்தலில் பவானிபூர் தொகுதியில் மம்தா போட்டியிடுகிறார். இந்தத் தொகுதியில் பெங்காலி பேசும் மக்களை விட குஜராத்திகள் மற்றும் மார்வாரிகள் தான் அதிகம். இதனால் மஹுவா பேச்சால் முதல்வர் மம்தா கோபம் அடைந்துள்ளார்.பவானிபூர் சட்டப் பேரவைத் தொகுதியில் 2வது முறை போட்டியிட்டு வெற்றி பெறும் நோக்கில் தேர்தலில் மம்தா களமிறங்கி உள்ளார். இந்நிலையில், சொந்தக் கட்சி எம்.பி. மஹுவாவின் பேச்சு எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கோபத்தில் இருக்கிறார் மம்தா.

பவானிப்பூர் மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதம் பேர் குஜராத்திகள், மார்வாரிகள் மற்றும் பிஹாரிகள். இந்நிலையில், மஹுவாவின் பேச்சால் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க குஜராத்தி மற்றும் மார்வாரி மக்களுடன் நட்புடன் பழகி அவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும் என்று கட்சியின் மூத்த தலைவர்களை மம்தா கேட்டுக்கொண்டுள்ளார்.கடந்த 2022ம் ஆண்டு, ‘காளி தேவி மாமிசம் உண்பவர்’ மற்றும் ‘மது அருந்துபவர்’ என்று மஹுவா பேசினார். 2023ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்புவதற்காகப் பணம் மற்றும் பரிசுகளைப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் அவரது எம்.பி. பதவி பறிக்கப்பட்டது.



■ உத்திரப்பிரதேச மாநில டிஜிபியாக பதவி உயர்வு பெற்ற திசையன்விளையைச் சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரி எல்.வி அந்தோணி தேவகுமார், குடியரசு துணைத் தலைவர் சி.பி ராதாகிருஷ்ணனை சந்தித்து வாழ்த்து பெற்றார்.



■ மதுரை மாநகரின் புதிய காவல் ஆணையர் அபிஷேக்தீக் சித் பதவியேற்பு. மதுரை மாநகர காவல் ஆணையராக இருந்த லோகநாதனுக்கு பதிலாக அபிஷேக்தீக் சித்தை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. மாநகர காவல் துறை சார்பில் அணி வகுப்பு மரியாதை அவருக்கு வழங்கப்பட்டது.

# சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்களின் மறைவிடத்தில் ரூ.11 கோடி மதிப்பிலான சுவிஸ் தங்க கட்டிகள் பறிமுதல்

பிஜாப்பூர், ஏப்.5-

சத்தீஸ்கர் மாநில பஸ்தார் சரக ஐ.ஜி. சுந்தர் ராஜ் பட்டிலிங்கம் நேற்று கூறியதாவது: மாவோயிஸ்ட் முக்கியத் தலைவர் ரூபேஷ் சரணடைந்ததைத் தொடர்ந்து, கிளர்ச்சியாளர்களின் தளபதி பாப்பாராவ் என்பவருக்காகப் பெருமளவு ரொக்கம், தங்கம் பிஜாப்பூர் வனப்பகுதிக்கு மாற்றப்பட்டதாகத் தகவல் கிடைத்தது.



இதனடிப்படையில், கடந்த 10 நாட்களாக நடத்தப்பட்ட தீவிர விசாரணையைத் தொடர்ந்து, அடர்ந்த வனப்பகுதியில் உள்ள மாவோயிஸ்ட்களின் மறைவிடம் கண்டறியப்பட்டது.அங்கிருந்து சுவிஸ் முத்திரையுடன் கூடிய தங்க கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. சுமார் 7.2 கிலோ எடை கொண்ட இந்த தங்க கட்டிகளின் மதிப்பு ரூ.11.16 கோடி.

தங்கக் கட்டிகளில் சுவிஸ் முத்திரை இருப்பதுதான் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. தடயவியல் சோதனைகளுக்குப் பின்னரே இதன் தரம் மற்றும் உண்மைத் தன்மை குறித்துத் தெரிய வரும். இது தொடர்பாகத் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர் கே.ஜே.பிரவீன்குமார் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆரப்பாளையத்தில் 100% தவறாமல் வாக்களிப்போம், என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்ற வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லையினை, பேருந்துகள் மற்றும் ஆட்டோகளில் ஒட்டி பொதுமக்களுக்கு தேர்தல் தொடர்பான விவரங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி பொதுமக்கள் கலந்துகொண்ட விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து பங்கேற்றார்.

# மக்கள் பிரச்சினைகளை எழுப்பியது குற்றமா? ஆம் ஆத்மி தலைமையிடம் ராகவ் சத்தா கேள்வி

புதுடெல்லி, ஏப்.5-

நாடாளுமன்றத்தில் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை எழுப்பியது குற்றமா என்று ஆம் ஆத்மி தலைமையிடம் ராகவ் சத்தா கேள்வி எழுப்பி உள்ளார்.

ஆம் ஆத்மியின் இளம் தலைவர்களில் ஒருவரான ராகவ் சத்தா, அந்த கட்சியின் மாநிலங்களவை துணைத் தலைவராக பதவி வகித்து வந்தார். அந்த பதவியில் இருந்து நேற்று முன்தினம் அவர் நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக புதிய துணைத் தலைவராக அசோக் மிட்டலை ஆம் ஆத்மி தலைமை நியமித்து உள்ளது.



ஆம் ஆத்மி தேசிய ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கேஜ்ரிவால் கடந்த 2024ம் ஆண்டில் கைது செய்யப்பட்டபோது கட்சியின் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. இதில் ராகவ் சத்தா பங்கேற்கவில்லை. கடந்த பிப்ரவரியில் மதுபான கடைகள் ஒதுக்கீட்டு வழக்கில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதுதொடர்பாகவும் ராகவ் சத்தா எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை. நாடாளுமன்றத்தில் ஆம் ஆத்மி சார்பான கருத்துகளை அவர் எடுத்துரைக்கவில்லை. இதன் காரணமாகவே மாநிலங்களவை துணைத் தலைவர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து ராகவ் சத்தா நேற்று வெளியிட்ட வீடியோவில் கூறியிருப்பதாவது: மாநிலங்களவையில் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை எழுப்பினேன். இது ஒரு குற்றமா? அவையில் நான் பேசக்கூடாது என்று ஆம் ஆத்மி சார்பில் மாநிலங்களவை செயலாளரிடம் கடிதம் அளிக்கப்பட்டு உள்ளது. நான் சாமானிய மக்களுக்காக குரல் கொடுக்கிறேன். நான் பேசக்கூடாது என்று தடுப்பது ஏன்?

விமான நிலையங்களில் கூடுதல் விலைக்கு உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. டெலிவரி ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். உணவு பொருட்களில் கலப்படம் அதிகரித்து வருகிறது. சுங்கச்சாவடி கொள்ளை முதல் வங்கிக் கொள்ளை வரை அனைத்து பிரச்சினைகளையும் மாநிலங்களவையில் எழுப்பி வருகிறேன்.

தொலைத்தொடர்பு நிறுவனங்கள் ஓராண்டில் 12 மாதங்களுக்குப் பதில் 13 மாதங்களுக்கான கட்டணத்தை மக்களிடம் வசூலிக்கின்றன. ரீசார்ஜ் செய்யவில்லை என்றால் அழைப்புகள் நிறுத்தப்படுகின்றன. இது போன்ற மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்காக தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறேன். இதனால் ஆம் ஆத்மிக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டது. எனது குரலை ஒடுக்க சிலர் விரும்புகின்றனர். எனது மவுனத்தை தோல்வியாக கருத வேண்டாம். நான் நதி போன்றவன். நான் ஆர்ப்பரித்தால் மிகப் பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்படும். இவ்வாறு ராகவ் தெரிவித்துள்ளார்.



## “திருப்பூர் தெற்கில் யானை முழக்கம்!” பகுஜன் சமாஜ் கட்சி ‘செஞ்சோலை சேகர்’ வேட்புமனு தாக்கல்!

திருப்பூர், ஏப்.5-

திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் 2026 பொதுத்தேர்தலில் போட்டியிட, பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் திருப்பூர் தெற்கு தொகுதி வேட்பாளராக 'செஞ்சோலை சேகர்' (எ) ரங்கசாமி அதிகாரப்பூர்வமாக வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

கட்சியின் மாநிலத் தலைவரும் உச்ச நீதிமன்ற வழக்கறிஞருமான ஆனந்தன், மேற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் ஈஸ்வரன் மற்றும் திருப்பூர் மாவட்டத் தலைவர் விக்டர் மனோவா ஆகியோரின் ஆலோசனையின்படி, மாநகராட்சி ஆணையாளர் திரு. அமித் அவர்களிடம் ரங்கசாமி தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

கட்சியின் பின்னணி: 1984ல் கான்ஷிராம் அவர்களால் தொடங்கப்பட்ட இக்கட்சி, தலித் மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறது. தற்போது மாயாவதி தலைமையிலான இக்கட்சியின் சின்னம் 'யானை' ஆகும். இந்நிகழ்வின் போது கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு வேட்பாளருக்கு உற்சாகமளித்தனர்.




■ மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 27.03.2026 அன்று முற்பகல் 10.00 மணிக்கு 'தமிழ்க்கூடல்' மற்றும் 'நூல் அரங்கேற்றம்' நிகழ்ச்சிகள் உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத் தொல்காப்பியர் அரங்கில் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியை உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வறிஞர் முனைவர் க. சோமசுந்தரி அவர்கள் ஒருங்கிணைத்தார். உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் மற்றும் இயக்குனர் முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா அவர்கள் தலைமை தாங்கினார். பேராவூரணி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கௌரவ விரிவுரையாளர் முதுமுனைவர் ப. செந்தில்முருகன் அவர்கள் கலந்துகொண்டு 'தமிழ் படித்தால் உலகம் உள்ளங்கையில்' என்ற தலைப்பில் தமிழ்க்கூடல் உரையாற்றினார்.



## “கைரேகை சட்டத்தை எதிர்த்த வீர வரலாறு!” உசிலம்பட்டியில் நேதாஜி சுபாஷ் சேனை நிர்வாகிகளின் முழக்கம்!

உசிலம்பட்டி, ஏப்.5-

ஆங்கிலேய அரசு கொண்டுவந்த அடக்குமுறைச் சட்டமான 'கைரேகை சட்டத்தை' எதிர்த்துப் போராடி, துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமடைந்த 16 தியாகிகளின் 106வது நினைவு நாள் இன்று மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள பெருங்காமநல்லூரில் அனுசரிக்கப்பட்டது.

இந்தத் தியாகிகளின் நினைவைப் போற்றும் விதமாக, நேதாஜி சுபாஷ் சேனை நிறுவனத் தலைவர் மகாராஜன் ஆணைக்கிணங்க, மாநிலச் செயலாளர் சுமன்தேவர் பெருங்காமநல்லூரில் உள்ள தியாகிகள் நினைவுத் தூணிற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார்.

இந்நிகழ்வில் மதுரை மாவட்ட இளைஞரணித் தலைவர் நிர்மல்குமார், திருப்பரங்குன்றம் ஒன்றியத் தலைவர் தியாகராஜன் மற்றும் மதுரை மாவட்ட நிர்வாகிகள் பலர் உடனிருந்து தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

வரலாற்றுப் பின்னணி: 1920ம் ஆண்டு ஏப்ரல் 3ம் தேதி, கைரேகை சட்டத்தை எதிர்த்த மக்கள் மீது ஆங்கிலேயப் படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் பலியாகினர். இவர்களின் வீரத்தைப் போற்றும் வகையில் இங்கு நினைவு மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



■ ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தோப்பு வெங்கடாசலம் பெருந்துறை தாலுகா அலுவலகத்தில், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்த போது, உடன் பெருந்துறை நகர பொருளாளர் செந்தில்குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## “2 லட்சம் வாக்குகள் வித்தியாசம்.. இது உறுதி!” : ஐ.பி.ஆர் வருகையால் ஆத்தூரில் திரண்ட திமுக தொண்டர்கள் சபதம்!

சின்னாளபட்டி, ஏப்.5-

ஆத்தூர் தொகுதியில் திமுக சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் வேட்புமனுவை ஆத்தூர் தாலுகா அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ஹென்றி பீட்டர் டம் மனு தாக்கல் செய்தார். அமைச்சர் ஐ.பெரியசாமி க்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்த நிர்வாகிகள், தொண்டர்கள் 2 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி வெற்றி பெறுவார் என்று சொல்லி வாழத்து தெரிவித்தனர்.



ஆத்தூர் தாலுகா அலுவலத்தில் வேட்புமனு செய்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுடன் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாலசுப்பிரமணி, ரசூல்மைதீன், மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ரெட்டியார்சத்திரம் திமுக ஒன்றிய திமுக செயலாளர் ப.க.சிவகுருசாமி மட்டும் தேர்தல் நடத்தும் அலுவலர் அறைக்கு அனுமதிக்கப்பட்டனர். அங்கு தேர்தல் நடத்தும் அலுவலரும், தனித்துணை ஆட்சியருமான ஹென்றி பீட்டர் அவர்களிடம் மனுத்தாக்கல் செய்தார்.

அதன் பின்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டார். மனுத்தாக்கல் செய்துவிட்டு வெளியே வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி கூறியதாவது, 37 ஆண்டுகளாக தொகுதி மக்களோடு மக்களாக பயணித்துள்ளேன். தொகுதி மக்களின் தேவைகள் எனக்கு அனைத்தும் தெரியும். எனது தேர்தல் வாக்குறுதியாக ரூ. 750 கோடியில் வைகை அணையிலிருந்து குடி தண்ணீர் கொண்டுவரும் திட்டம் மற்றும் ஆத்தூர் தொகுதியில் டைடல் பார்க், மாணவர்களுக்கு விடுதியுடன் கூடிய தனித்திறன் பயிற்சி மையம், தொழிலாளர் நல மருத்துவ மனை (ஈ.எஸ்.ஐ.) மற்றும் ரெட்டியார்சத்திரம், ஆத்தூர் ஒன்றிய பகுதிகளில் வானம் பார்த்த பூ+மியாக இருக்கும் குளங்களுக்கு மழை நீர் வீணாகாமல் அனைத்து குளங்களுக்கும் செல்லும் வகையில் ரூ. 7 ஆயிரம் கோடியில் சிமிண்ட் வாய்க்கால் அமைக்கும் பணி உட்பட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

தேர்தல் முடிந்த பின்பு சின்னாளபட்டியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவ மனையாக தரம் உயர்த்தப்படும். அதற்கு செல்;லும் வழிக்கு மாற்றுப் பாதைக்கான இடங்களை ஏற்பாடு செய்துவிட்டோம். தமிழக முதல்வராக 2வது முறையாக கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பின்பு ஒரு வார காலத்தில், அரசு மருத்துவமனையாக மாறும் என்றார்.

தமிழ் இனத்திற்கு துரோகம் செய்யும் வகையில் அதிமுக தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்துள்ளார். மக்கள் அதிமுக கூட்டணிக்கு வாக்களிக்க மாட்டார்கள். தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி அமோக வெற்றி பெறும் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த திமுக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கைதட்டி ஆராவாரம் செய்தனர். நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், தண்டபாணி, அமைச்சரின் முன்னாள் உதவியாளரும், மூத்த திமுக நிர்வாகியுமான கூடலூர் ராஜா, கிழக்கு மாவட்ட திமுக துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்கிரேட் மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் பிள்ளையார்நத்தம் முருகேசன், ராமன். ராஜேந்திரன், எம்.இன்பராஜ், மணி, முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், இலக்கிய அணியைச் சேர்ந்த முருகானந்தம், விவசாய அணியைச் சேர்ந்த கண்ணன், பொது குழு உறுப்பினர்கள் அக்பர், கலைராஜன், ரமேஷ், டென்னி, மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், பேரூராட்சி மன்றத்தலைவர்கள், பேரூர் கழக செயலாளர்கள், இளைஞரணியினர், மகளிர் அணியினர் உட்பட பலர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



## “எந்த உணவுகளை வேண்டுமானாலும் சாப்பிடலாம்”

### சுற்றுலாப் பயணிகளுக்கு திரிணமூல் அழைப்பு

கொல்கத்தா, ஏப்.5-

மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சிக்கு வந்தால், பிரபலமான மீன் உணவு வகைகளுக்குத் தடை விதிக்கப்படலாம் என்ற பிரச்சாரத்தை முதல்வர் மம்தா பானர்ஜி முன்னெடுத்து வருகிறார்.

“நமது மாநிலத்தில் பெரும்பாலான வியாபாரிகள் சாலையோரங்களில் தான் மீன்களை விற்க முடியும். இவர்கள் ஆட்சிக்கு வந்தால், உரிமம் பெற்று ஷாப்பிங் மால்களில் மட்டுமே விற்பனை செய்ய முடியும். அதுபோன்ற நிலை நமக்கு வேண்டுமா? எனவே, பாஜக ஆட்சிக்கு வரக்கூடாது. அதற்காகவே, திரிணமூல் காங்கிரஸுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்” என்று மம்தா பிரச்சாரம் செய்தார்.

இந்நிலையில் மேற்கு வங்கத்துக்கு சுற்றுலாப் பயணிகள் தாராளமாக வரலாம் என்றும், மீன் உணவு வகைகளை விரும்பிச் சாப்பிடலாம் என்றும் திரிணமூல் காங்கிரஸ் அழைப்பு விடுத்துள்ளது. இதுதொடர்பாக தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் வலைதளத்தில் கூறியுள்ளதாவது: மேற்கு வங்கத்துக்கு சுற்றுலாப்பயணிகள் வரலாம். அவர்கள் மேற்கு வங்க மாநிலம் முழுவதும் பரிமாறப்படும் சுவையான அசைவ உணவுகளை சாப்பிடலாம்.

பிரபலான முரி கோண்டா, பாப்டா மச்சர் ஜல், லிஷ் பாப்பா, சிங்ரி மலாய் கறி, பேட்கி படுரி, கோஷா மாங்ஷோ உள்ளிட்ட உணவு வகைகளை நாங்கள் பரிந்துரைக்கிறோம். நீங்கள் மேற்கு வங்கத்தில் தங்கும் நாட்கள் இனிமையாக அமையட்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது



## “விதிமீறல் நடந்தால் கடும் நடவடிக்கை!” மிங்மாடி ஷெர்பா கிடுக்கிப்பிடி உத்தரவு!

மதுரை, ஏப்.5

மதுரை மாவட்டத்தில் 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பணிகளைக் கண்காணிக்கும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள பொதுப் பார்வையாளர் மிங்மாடி ஷெர்பாபல்வேறு தொகுதிகளில் அதிரடி ஆய்வு மேற்கொண்டார்.

நேரடி ஆய்வு: மதுரை மாவட்டத்தில் உள்ள 195திருப்பரங்குன்றம் மற்றும் 196திருமங்கலம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் அலுவலகங்களுக்குப் பார்வையாளர் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி, விதிமுறைகளைக் கண்டிப்புடன் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். தேர்தல் செயல்முறைகள் அனைத்தும் தடையின்றி சீராக நடைபெறத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## “கடந்த தேர்தலில் அதிமுகவை பாஜகவிடம் அடகு வைத்த இபிஎஸ் இம்முறை விற்றுவிட்டார்” உதயநிதி

சிவகங்கை, ஏப்.5-

“கடந்த தேர்தலில் அதிமுகவை பாஜகவிடம் அடகு வைத்த பழனிசாமி, இந்த முறை விற்றுவிட்டார்” என துணை முதல்வர் உதயநிதி விமர்சனம் செய்தார்.



சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியில் திருப்பத்தூர் திமுக வேட்பாளர் கேஆர். பெரியகருப்பனை ஆதரித்து துணை முதல்வர் உதயநிதி பேசியது: “ஐந்து ஆண்டுகள் திராவிட மாடல் ஆட்சியில் சொன்ன வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியுள்ளோம். அந்த தைரியத்தில் தான் இந்த முறை வாக்கு கேட்டு வந்துள்ளேன்.

அதிமுக ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கிய மடிக்கணினி திட்டத்தை 2019ல் அவர்களே நிறுத்திவிட்டனர். ஆனால் முதல்வர், கல்லூரி மாணவர்களுக்கு தான் பயனுள்ளதாக இருக்கும் என்று, அவர்களுக்கு 10 லட்சம் மடிக்கணிகளை வழங்கினார்.

மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தேர்தலை காட்டி அதிமுக, பாஜக நிறுத்த சதி செய்தது. அதை முறியடித்து ரூ.5,000 கொடுத்தார் முதல்வர். காலை 6.30க்கு அனுப்பிய பணத்தை, குறைந்தபட்ச இருப்பு இல்லை என்று கூறி மோடி எடுத்துவிடுவார் என்ற பயத்தில் காலை 9 மணிக்கே பெண்கள் எடுத்துவிட்டனர். இந்த முறை 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவோம்.

முதல்வர் சொல்வது போல் இந்த தேர்தல் தமிழகத்துக்கும், டெல்லிக்குமானது. இதில் டெல்லி அணியை வீழ்த்த வேண்டும். திமுக அரசு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. ஆனால், மத்திய அரசு நாம் கேட்ட நிதியை கூட கொடுக்கவில்லை. பட்ஜெட்டில் கூட எந்த திட்டமும் தமிழகத்துக்கு இல்லை. இதனால் நேரடியாக வந்தால் தமிழக மக்கள் விடமாட்டர் என்று, அதிமுக என்ற போர்வையை போர்த்திக் கொண்டு பாஜக வருகிறது. அவர்களை தமிழக மக்கள் அனுமதிக்க கூடாது.

ஏற்கெனவே பழனிசாமிக்கு 10 தோல்விகளை கொடுத்துள்ளோம். இந்த தேர்தலில் 10 தோல்வி பழனிசாமியை மொத்த தோல்வி பழனிசாமியாக்கி வீட்டு அனுப்ப வேண்டும். கேஆர்.பெரியகருப்பனை 1 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்” என்று அவர் பேசினார்.

சிவகங்கையில் திமுக வேட்பாளர் கருணாஸை ஆதரித்து உதயநிதி பேசியது: “முரட்டு பக்தர்கள், முரட்டு தொண்டர்களை பார்த்திருப்போம். ஆனால் யாரும் முரட்டு அடிமையை பார்த்ததில்லை. இந்தியாவிலேயே நம்பர் ஒன் மோடியின் முரட்டு அடிமை பழனிசாமி தான். ஜாடிக்கு ஏற்ற மூடி போல், மோடிக்கேற்ற ஒரு பழனிசாமி.

இந்த தேர்தலில் தமிழகத்தில் பாசிச, சங்கிக் கூட்டத்துக்கு இடமில்லை என்று வெளியேற்ற வேண்டும். கடந்த தேர்தலில் பாஜகவிடம் அதிமுகவை அடகு வைத்த பழனிசாமி, இந்த முறை விற்றுவிட்டார். அதிமுக வெற்றி பெற்றால் பாஜக தான் டெல்லியிலிருந்து ரிமோட் கன்ட்ரோல் மூலம் தமிழகத்தை ஆட்சி செய்யும்” என்று அவர் பேசினார்.



# “வாக்குச்சாவடிகளில் கலெக்டரின் நேரடி விசிட்!” கடையநல்லூர், ஆலங்குளம் தொகுதிகளில் அதிரடி ஆய்வு

தென்காசி ஏப். 5-

தென்காசி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான ஏ.கே. கமல் கிஷோர், கடையநல்லூர் மற்றும் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

ஆலங்குளம் தொகுதி, கடையநல்லூர் தொகுதி வாக்குச்சாவடி மையங்களில் உள்ள அனைத்துக் குறைபாடுகளையும் உடனுக்குடன் சரிசெய்து, தேர்தல் பணிகளுக்கு முழுத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, தோரணமலை கடையம் சாலையில் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் மேற்கொண்டு வரும் வாகனச் சோதனையை ஆட்சியர் நேரில் சென்று மேலாய்வு செய்தார்.

இந்நிகழ்வில் கடையம் வட்டார வளர்ச்சி அலுவலர் பத்மா, செங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் அலிஸ்தாயம்மாள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## “மக்கள் செல்வாக்கோடு களத்தில் வெங்கடேசன்!”

# சோழவந்தான் தொகுதியைத் தக்கவைக்க திமுக நிர்வாகிகள் அதிரடி வியூகம்

அலங்காநல்லூர் ஏப். 5-

மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசன், அலங்காநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராமப் பகுதிகளில் இன்று தீவிரமாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

வாவிடமருதூர் கிராமத்தில் பிரச்சாரத்தைத் தொடங்கிய வேட்பாளருக்கு, ஒன்றியத் துணைச் செயலாளர் கார்த்திகேயன் தலைமையில் கைத்தறி ஆடை மற்றும் ஆளுயர மாலை அணிவித்து மேளதாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பயணம் செய்த பகுதிகள்: சால்வார்பட்டி, பூலாம்பட்டி, பண்ணைக்குடி, அச்சம்பட்டி, மேட்டுப்பட்டி, மெய்யப்பன்பட்டி, தண்டலை, வலசை, குமாரம், கோட்டைமேடு மற்றும் கல்லணை ஆகிய கிராமங்களில் வேட்பாளர் வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரித்தார்.

இந்நிகழ்வில் இந்த நிகழ்ச்சியில் திமுக மாவட்ட அவைத் தலைவர் பாலசுப்ரமணியன் ஒன்றிய செயலாளர்கள் தனராஜ் பரந்தாமன் முத்தையன் அருண்குமார், பசும்பொன்மாறன், தனசேகர், ஒன்றிய துணைச் செயலாளர் கார்த்திகேயன், நகரக் கழகச் செயலாளர்கள் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், பேரூராட்சி தலைவர்கள் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ்

சுமதிபாண்டியராஜன், பால்பாண்டி, ஜெயராமன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, காயத்ரி இதயச்சந்திரன், அய்யங்கோட்டை

விஜயகுமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் சந்தனகருப்பு

சுபாஷ்மதுரைவீரன், துணை அமைப்பாளர் சின்னஊர்சேரி ஆனந்த், மற்றும் பாலகிருஷ்ணன் நிர்வாகிகள் கோவிலூர் செந்தில்குமார், சின்னஊர்சேரி தியாகு குமரேசன், வேல்முருகன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# “கேரளாவிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள்”

## ரேவந்த் ரெட்டிக்கு பினராயி விஜயன் பதில்

திருவனந்தபுரம், ஏப்.5-

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி அண்மையில் கேரள மாநிலம் கொச்சியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் கூறும்போது, “தெலங்கானாவில் சந்திரசேகர ராவ் 10 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அந்த ஆட்சியில் ஊழல் மிகுந்திருந்தது.

சந்திரசேகர ராவை போன்றே கேரள முதல்வர் பினராயி விஜயனும் ஆட்சி நடத்துகிறார். அவரது ஆட்சியில் ஊழல் அதிகமாக உள்ளது" என்றார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையில் கேரள முதல்வர் பினராயி விஜயன் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:




தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியை சிலர் தவறாக வழிநடத்தி உள்ளனர். அதனால் அப்படி பேசியிருக்கிறார்.

இதன் காரணமாகவே அவர் கேரளா குறித்து எதிர்மறையாக பேசியிருக்கிறார். இந்தியாவில் ஊழல் குறைந்த மாநிலங்களில் ஒன்றாக கேரளம் திகழ்கிறது. வளர்ச்சி சார்ந்த நிதி ஆயோக் பட்டியலில் கேரளம் 79 புள்ளிகளை பெற்று முதலிடத்தில் இருக்கிறது. தெலங்கானா 6வது இடத்தில் மட்டுமே இருக்கிறது. கேரளத்தில் பிறக்கும் 1,000 குழந்தைகளில் 5 குழந்தைகள் மட்டுமே உயிரிழக்கின்றன.

இதில் அமெரிக்காவை விட நாங்கள் முன்னேறிய நிலையில் இருக்கிறோம். ஆனால் தெலங்கானாவில் குழந்தைகள் உயிரிழப்பு மிகவும் அதிகமாக உள்ளது. இந்தியர்களின் சராசரி ஆயுளைவிட கேரள மக்களின் ஆயுள் 7 ஆண்டுகள் அதிகமாக உள்ளது. தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி கேரளாவிடம் இருந்து நிறைய பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். அவரை வரவேற்க நாங்கள் தயாராக உள்ளோம். இவ்வாறு முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.



■ புதுச்சேரியில் தவெக தலைவர் விஜய், புதுச்சேரி தவெக வேட்பாளர்களை ஆதரித்து பரப்புரை மேற்கொண்டார்.



# “மூன்று குழந்தைகளுடன் தவித்த தாய்.. ஓடி வந்த அறக்கட்டளை!” - திருப்பூரில் சமூக சேவையால் மனம் நெகிழ்ந்த பொதுமக்கள்

திருப்பூர் ஏப். 5-

திருப்பூர் அனுப்பர்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் கனிமொழி (35). கணவனால் கைவிடப்பட்ட இவர், 6 வயதான ஜெனிபர், 5 வயதான ஜெனிதா மற்றும் 7 மாதக் கைக்குழந்தையான ஜனாதனி ஆகிய மூன்று குழந்தைக ளுடன் அன்றாட வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் தவித்து வந்துள்ளார்.

வாழ்வா தார த்திற்கு வழியில்லாமல் தவித்த கனிமொழி, மக்கள் பொது மனித சமூக சேவை - அறக்கட்டளையை (MPSS) அணு கி உதவி கோரினார். அறக்கட்டளையின் நிறுவனர் யி.வினோத் குமார், தலைமைப் பொருளாளர் ரி. பழனிச்சாமி மற்றும் வடக்கு மாவட்டத் தலைவர் வி. சதீஷ்குமார் ஆகியோரின் முன்னிலையில் அக்குடும்ப த்திற்குத் தேவையான உதவிகள் செய்யப்பட் டன. கனிமொழியின் குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் மற்றும் 25 கிலோ அரிசி மூட்டை வழங்கப்ப ட்டது.

"ஈன்றதை செய்வோம் இல்லாதவர்க்கு" எ ன்ற உயர்ந்த நோக்கத்தோடு செயல்படும் மக்கள் பொது மனித சமூக சேவை - அறக்கட்டளையின் இந்தச் செயலை அப்பகுதி மக்கள் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.



# ஒட்டன்சத்திரத்தில் சுயேட்சை வேட்பாளர் ப. உதயகுமார் வேட்பு மனு தாக்கல்

திண்டுக்கல்,ஏப்.5-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ஒட்டன்சத்திரம் நகராட்சி சத்யாநகர் பகுதியைச் சேர்ந்த ப. உதயகுமார், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.இந்த வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலர் பிரபு பெற்றுக்கொண்டார். அப்போது, தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் வி. சஞ்சய்காந்தி அவர்கள் உடன் இருந்து ஆவணங்களை சரிபார்த்தார். இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர் ஆ. இளங்கோவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பத்திரிகை எழுத்தாளர் ப. உதயகுமார் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

பொதுமக்களின் பிரச்சினைகள் மற்றும் அவல நிலைகளில் தொடர்ந்து குரல் கொடுத்து, சமூக ஆர்வலர்களின் முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருந்து வரும் ப. உதயகுமார், அப்பகுதி மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து, ஒட்டன்சத்திரம் தொகுதியில் தேர்தல் களப்பணி சூடுபிடித்துள்ளது.

# அமெரிக்காவின் எப்35, எப்15 விமானத்தை சுட்டு வீழ்த்தினோம்

## ஈரான் ராணுவம் தகவல்

டெஹ்ரான், ஏப்.5-

ஈரான் வான் பரப்பில் பறந்த அமெரிக்க விமானப் படையின் எப் 35 மற்றும் எப் 15 இ ரக போர் விமானங்களை நேற்று சுட்டு வீழ்த்தியதாக ஈரான் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு ஆதாரமாக, போர் விமானங்களின் உடைந்த பாகங்கள் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்டு உள்ளன. ஆனால் இந்த தகவல்கள் உறுதி செய்யப்படவில்லை. அமெரிக்க ராணுவமும் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை உறுதி செய்யவில்லை. அமெரிக்க போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டபோது ஒரு விமானி பாராசூட் மூலம் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது.

அந்த விமானியை ஈரான் ராணுவம் பிடித்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால் இதுவும் உறுதி செய்யப்படவில்லை. அமெரிக்க விமானி பிடிபட்டது தொடர்பான புகைப்படமோ, வீடியோவோ வெளியிடப்படவில்லை. கடந்த மார்ச் 19ம் தேதி அமெரிக்காவின் எப்35 போர் விமானத்தை சுட்டு வீழ்த்தினோம். தற்போது இரண்டாவது எப்35 ரக போர் விமானத்தையும் சுட்டு வீழ்த்தியுள்ளோம் என்று ஈரான் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன






















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000